දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය-පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA
තැ.පෙ.43/ தபால் பெட்டி 43 /P.O.Box 43
පරණ ගලහ පාර, පේරාදෙණිය, ශ්‍රී ලංකාව
பழைய கலகா வீதி, பேராதனை, இலங்கை
Old Galaha Road, Peradeniya, Sri Lanka

මගේ අංකය
எமது இலக்கம்
My Ref:

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your Ref:

30.03.2022

தொடர் தொலைக்கல்வி நிலைய வெளிவாரி பழைய பாடத்திட்டப் பட்டதாரிகளின் கவனத்திற்கு,

<u>பட்டமளிப்பு விழா (வெளிவாரி) – டிசம்பர், 2019</u>

அன்பார்ந்த பட்டதாரிகளே.

1) 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கலைமாணி மற்றும் வியாபார நிர்வாகமாணிப் பரீட்சையில் (வெளிவாரி) தோற்றி சித்தி அடைந்த பரீட்சார்த்திகளுக்கான பட்டமளிப்பு விழா 2022 மே மாதம் 26ம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

2) இப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்ற உங்களது விபரமானது விண்ணப்படிவம் ஒன்றின் மூலம் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கிய விபரங்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றைத் திருத்தி, கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ***'CONVOCATION' (EXTERNAL) 2019*** எனக் குறிப்பிட்டு,
***Assistant Registrar, Centre for Distance and Continuing Education, No. 43, Old Galaha Road, Peradeniya.***
என்ற முகவரிக்கு 2022-04-20 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். அத்துடன் பட்டமளிப்பு விழா தொடர்பாக CDCE இணையதளத்தில் பதிவேற்றப்படும் Google form இனை நிரப்புதல் கட்டாயமானதாகும்.

3) விண்ணப்பபடிவத்துடன் பட்டமளிப்பு விழாவிற்கான கட்டணமான ரூபா. 5000/-ஐ பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலைய கணக்கிலக்கம் <u>057–1–001–4-1338036</u>ற்கு, இலங்கையிலுள்ள ஏதாவதொரு மக்கள் வங்கி கிளையில் செலுத்தி, பெற்றுக்கொண்ட வங்கிச்சீட்டின் மூலப்பிரதியை ***(Original Cash Deposit Slip)*** இணைத்து அனுப்பவும். (அவ்வங்கிப் பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியொன்றை உங்கள் வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) அத்துடன் விண்ணப்பப் பத்திரத்தில் இலக்கம் 1 மற்றும் 8 அடங்கிய விபரங்களை நிரப்பி அனுப்பவும். (விண்ணப்பப்பத்திரத்தில் 6ம் இலக்கத்தில், தற்போது நீங்கள் பயன்படுத்தும் சேவையிலுள்ள தொலைபேசி இலக்கமொன்றினைக் குறிப்பிடல் வேண்டும்.) அத்துடன் ரூபாய் 50/= முத்திரை ஒட்டப்பட்ட (9"x4") அளவுடைய சுயவிலாசமிடப்பட்ட தபால் உறைகள் இரண்டும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

4) விண்ணப்பப்பத்திரத்தில் 6ம் இலக்கத்தில், நீங்கள் குறிப்பிட்டுள்ள, தற்போது பயன்படுத்தும் சேவையிலுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலம் தகவல்கள் எமது நிலையத்திலிருந்து அனுப்பப்படுவதால், தயவுசெய்து அவ்விலக்கத்தினை மாற்றாதிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

❖ மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்தைப் பார்வையிடவும் (**www.pdn.ac.lk/cdce**)

சிரேஸ்ட பிரதிப் பதிவாளர்,
தொடர்தொலைக்கல்வி நிலையம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

දුරකථන/தொலைபேசி/Telephone :0812388057, 0812392206, 0812392209, 0812392210, 0812392211
ෆැක්ස්/ பெக்ஸ்/Fax : 0812389206 වෙබ් අඩවිය/ இணையத்தளம்/Web site: www.pdn.ac.lk/cdce